எஸ்.டி.சி.எண். 148/2022 தேதி - 29.03.2023

<u>ம.சா.1 ஆன Mrs.Chandra, W/o. என்பவர் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.</u>

1. எனக்கும் எதிரியின் அம்மாவிற்கும் சுமார் 10 வருட காலமாக பழக்கம் உள்ளது. எந்த வருடத்திலிருந்து எதிரியின் அம்மாவுடன் எனக்கு பழக்கம் உள்ளது என்று எனக்கு ஞாபகமில்லை. நான் தற்போது வேலைக்கு எதுவும் செல்லவில்லை. வீட்டில் தான் இருந்து வருகிறேன். எதிரியின் அம்மா என்னிடம் 2017ம் ஆண்டு முதல் 2019ம் ஆண்டு வரை சிறுக சிறுக தொகை கடனாக பெற்றார். நான் மேற்குறிப்பிட்ட சங்கதியை எனது புகாரிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும், குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். ம.சா.ஆ.4 ல் 2017ம் ஆண்டில் ரூ.7,00,000/= கொடுக்கப்பட்டதாக காணப்படுகிறதென்றால் சரிதான். 2018ம் ஆண்டு ரூ.8,30,000/= கொடுக்கப்பட்டதாக ம.சா.ஆ.4ல் காணப்படுகிறதென்றால் சரிதான்.

2. நான் வேலைக்கு எதுவும் செல்லாத நிலையில் எவ்வாறு ரூ.15,30,000/= நான் எதிரிக்கு கடன் கொடுத்தேன் என்றால் எனது கணவர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின் கிடைத்த பணி பண பலன்களை வைத்து தொகை வழங்கினேன். எனது கணவர் உதவி காவல் ஆய்வாளராக பணி புரிந்து 2016ம் ஆண்டு ஓய்வு பெற்றார். எனது கணவருக்கு ஓய்வூதிய பலன்களாக சுமார் ரூ.30,00,000/= கிடைத்தது. 2017 மற்றும் 2018ம் ஆண்டு தொகை கொடுத்ததாக நான் மேற்குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் எந்த இடத்தில் வைத்து அத்தொகையை வழங்கினேன் என்றால் எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். நான் கைப்பணமாகத்தான் கொடுத்தேன். நான் எதிரியின் தாய்க்கு தொகை சிறுக சிறுக கொடுத்துள்ளேன் என்று கூறியுள்ளேன் என்றாலும், எந்தெந்த தேதியில்

எவ்வளவு தொகை கொடுத்தேன் என்றால் சரியாக தற்போது ஞாபகமில்லை, ஆனால் அவை குறித்து நான் எனது புகாரில் சொல்லியுள்ளேன். எதிரியின் தாய் என்னை அணுகி பணம் கேட்டால் அன்றைய தினமே நான் கொடுத்து விடுவேனா என்றால் பணத்தை ஏற்பாடு செய்து ஓரிரு நாளில் கொடுத்து விடுவேன்.

3. எனது கணவரின் ஓய்வூதிய பணப்பலன்கள் அவருடைய வங்கி கணக்கில் இருக்கும் எதிரியின் தாய் கேட்கும் போதெல்லாம் நான் வங்கி கணக்கிலிருந்து பணத்தை எடுத்து எதிரியின் தாய்க்கு கொடுப்பேன். நான் வங்கியிலிருந்து பணத்தை எடுத்து கொடுத்ததற்குண்டான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனது கணவர் தற்போது இறந்து விட்டார். அவருடைய வங்கி கணக்கு புத்தகம் தற்போது என் வசம் உள்ளதா என்றால், அந்த ஆவணங்களை வங்கியிலேயே வாங்கி கொண்டார்கள். எனது கணவரின் கணக்கும் வங்கியால் மூடப்பட்டு விட்டது. நான் எனது கணவரின் கணக்கு வைத்திருந்த வங்கியை சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் எனது கணவரே இறந்த பிறகு அவர்களை எவ்வாறு விசாரிக்க முடியும் என்று சாட்சி கூறினார்.

4. சுசீலா என்பவர் எதிரியின் அம்மாவுடைய அக்கா ஆவார். நான் எதிரியின் அம்மாவிற்கு தொகை கொடுக்கும் போது சுசீலா உடனிருந்தார். எதிரியினுடைய படிப்பு செலவிற்காகவும், வியாபாரத்திற்காகவும், குடும்ப செலவிற்காகவும் வேண்டி என்னிடம் எதிரியின் தாயார் தொகை பெற்றார். எதிரி என்ன படித்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் எதிரியின் தாயாருக்கு வட்டிக்கு பணம் கொடுக்கவில்லை. உதவியாகத்தான் கொடுத்தேன். ஆனால் எதிரியின் தாயார் வட்டி தருவதாக என்னிடம் கூறினார். ஆனால் வட்டியும் தரவில்லை. நான் எதிரியின் தாயாருக்கு ரூ.15,30,000/= கடன் கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றாலும், அதற்கான ஆவணம் ஏதேனும் எழுதி

வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. எதிரி என்னிடம் நேரடியாக பணம் வாங்கவில்லை. 2020ல் எதிரியின் தாயார் அம்பத்தூரிலிருந்து வீட்டினை காலி செய்து விட்டார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எதிரியினுடைய தந்தை பெயர் மோகன் ஆகும். எதிரியின் வீடு எங்கு உள்ளது என்று எனக்கு தெரியாது. புகாரில் கண்ட எதிரியின் விலாசத்திலிருந்து 12.09.2020 அன்றே வீட்டினை காலி செய்து சென்றுவிட்டார் என்றாலும், எதிரி வாடகை கொடுக்க முடியாமல் காலி செய்து விட்டதால் அந்த வீட்டின் உரிமையாளர் எதிரிக்கு 19.10.2020 அன்று வாடகை பாக்கியை செலுத்த கூறி எதிரிக்கு கதவு எண்.136, அன்னை இந்திரா நகர், 5வது தெரு, மம்மத்துக்குளம், செங்குன்றம் என்ற முகவரிக்கு அறிவிப்பு அனுப்பினார் என்றாலும், நான் புகார் தாக்கல் செய்யும் போது எதிரி புகாரில் கண்ட விலாசத்தில் வசிக்கவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1ல் எதிரியின் தாயார் என்னிடம் தொகை பெற்றதாக காணப்படுகிறதென்றால் சரிதான். ம.சா.ஆ.2 ஆனது எதிரியின் அம்மா தான் என் வசம் கொடுத்தார் என்றால் ம.சா.ஆ. 2 ஆனது என்வசம் கொடுக்கப்படும் போது எதிரியும் அவரது தாயாருடன் இருந்தார். நிரப்பப்படாத காசோலையை தான் எதிரியின் தாயார் என் வசம் கொடுத்தார் என்றால் அவர்கள் சொல்லும் போது பூர்த்தி செய்து கொள்ளுமாறு எதிரி தான் என் வசம் கூறினார். எதிரியின் தாயார் வசம் காசோலை இல்லாததால் எதிரி அவருடைய காசோலையை என்னிடம் கொடுத்தார்.

5. எனது வீட்டில் வைத்து தான் என்னிடம் காசோலை கொடுக்கப்பட்டது. 23.12.2021 அன்று என்னிடம் காசோலை கொடுத்தார்கள். மதியம் சுமார் 3 மணியளவில் காசோலை கொடுக்கப்பட்டது. 28.02.2022 அன்று காசோலையை தாக்கல் செய்யும் படி எதிரி என்னிடம் தொலைபேசி மூலம் கூறினார். ம.சா.ஆ.2 ல் 28.12.2021 என்று காணப்படுகிறது.

எதிரி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/- (Tmt.A.Theviya),
Judicial Magistrate,
Fast Track Court,
Ambattur.

//True Copy//
Judicial Magistrate,
Fast Track Court,
Ambattur.